European Asylum, Migration and
Integration Fund

ERIN
European Reintegration Network

International Organization for Migration (IOM)
Organisation internationale pour les migrations (OIM)
Internationale Organisatie voor Migratie (IOM)

# ஐரோப்பிய மீளிணைதல் வலைப்பின்னலின் (ERIN) தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்திற்கான தகவல் குறிப்பு

## ஸ்ரீலங்கா

ஓஸ்ட்ரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், இத்தாலி, லக்ஸம்பேர்க், மோல்டா, நெதர்லாந்து, நோர்வே, ரொமேனியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து திரும்பும் ஸ்ரீலங்கா பிரஜைகளுக்கு, அவர்கள் நாட்டை வந்தடைந்த பின்னர், மீளிணைதலுக்கான உதவி




## 1. ERIN தனித்துவமான நடவடிக்கை திட்டம் பற்றிய மேலோட்டம்

ஐரோப்பிய மீளிணைதல் வலைப்பின்னல் (ERIN) தனித்துவமான நடவடிக்கை திட்டம் என்பது, மூன்றாம் நாட்டு குடிமக்களை அவர்களது சொந்த இடங்களில் பேண்தகு முறையில் மீள்திரும்பி மீளிணைவதை, பங்குபற்றும் ERIN பங்காளர் நாடுகளிடையேயான ஒத்துழைப்புடன், நடைமுறைப்படுத்தும் ஒரு கூட்டு, மீள்திரும்பல் மற்றும் மீளிணைதல் செயல்திட்டமாகும். 2012இலிருந்து 2014வரை நடைமுறைப்படுத்தப்பட்ட ஏஜரோப்பிய மீளிணைதல் பொறிமுறைø (ERI) செயல்திட்டத்திலிருந்து ERIN ஆரம்பமாகின்றது. ERIN தனித்துவமான நடவடிக்கை திட்டமானது 2016ஆம் ஆண்டு ஜுன் மாதம் 1ஆம் திகதியிலிருந்து 2017ஆம் ஆண்டு மே மாதம்

31ஆம் திகதி வரை செயல்படுத்தப்படும். ERIN செயல்திட்டமானது ஜூன் 2014 முதல் மே 2016 வரையாகும்.

ERIN தனித்துவமான நடவடிக்கை திட்டத்தின் கீழ் 90% ஐரோப்பிய ஆணைக்குழுவினாலும் (ஐரோப்பிய புகழிடம், புலம்பெயர்வு மற்றும் மீளிணைதல் நிதியம்), பங்குபற்றும் பதினெட்டு ERIN பங்காளர் நாடுகளாலும் (ஒஸ்ட்ரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், இத்தாலி, லக்ஸம்போர்க், மோல்டா நெதர்லாந்து, நோர்வே, ரொமேனியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம்) ERIN தனித்துவமான நடவடிக்கை திட்டநிதி அளிக்கப்படுகின்றது.

இந்த செயல்திட்டம் பத்தொன்பது ஐரோப்பிய பங்காளர் நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது: Ministry of Interior- Austria, Department Of Immigration and Border Protection (DIBP)- Australia, Federal Immigration Office and Federal Agency for the Reception of Asylum Seekers (Fedasil)- Belgium, Ministry of Foreign Affairs- Denmark, Finnish Immigration Service- Finland, French Immigration and Integration Office (OFII)- France, Federal Office for Migration and Integration Office- Germany, Ministry of Public Order and citizen Protection-Greece, Ministry of Interior- Italy, Ministry of European and Foreign Affairs- Luxembourg, Ministry for Home Affairs and National Security- Malta, Repatriation and Departure Service – Netherlands, Norwegian Directorate of Immigration- Norway, General Inspectorate for Immigration- Romania, Integration of Immigrants Migration Board- Spain, Swedish Migration Agency- Sweden, State Secretariat for Migration- Switzerland and the UK Home Office – Immigration Enforcement (UKHO); மற்றும் மீள்திரும்பல் நாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் சேவைவழங்குநர்கள்.

## 2. IOM பணிக்கூற்று

மனிதநேயமானதாகவும் முறைப்படி மேற்கொள்ளப்படுவதுமான புலம்பெயர்வு, புரலம்பெயர்பவர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மையளிக்கின்றது என்னும் கொள்கைக்கு IOM தன்னை அர்ப்பணித்துள்ளது. புலம்பெயர்தலை அரசாங்கங்கள் நிர்வகிப்பதற்கும் புலம்பெயர்வு செயல்முறைகளில் புலம்பெயர்வாளர்களுக்கு உதவுவதற்காகவுமென 1951ஆம் ஆண்டு IOM ஸ்தாபிக்கப்பட்டது. இன்று, உலகளாவிய அளவில் 165 அங்கத்துவ நாடுகளிலும், 481 அலுவலக பிரதிநிதிப்படுத்தல்களுடனும், புலம்பெயர்வு துறையில் முன்னணியில் நிற்கும் அரசுடன் இணைந்து செயற்படும் நிறுவனம் IOM ஆகும். ஏனைய செயற்பாடுகளுக்கு மத்தியில், 30 வருடகால அனுபவத்தினூடாக உருவாகிய IOM நிபுணத்துவமான ரீஉதவி வழங்கல் ஊடாக சுயவிருப்புடன் நாடுதிரும்பல் மற்றும் மீளிணைதல் நிகழ்ச்சித் திட்டத்தின்ö கீழ் மக்கள் தமது நாட்டிற்குத் திரும்புவதிலும் ஒரு புதிய வாழ்க்கையை கட்டியெழுப்புவதிலும் உலகம் முழுவதுமுள்ள மக்களுக்கு IOM ஆதரவு வழங்குகிறது. 1979இலிருந்து IOMஇனது ரீஉதவி வழங்கல் ஊடாக சுயவிருப்புடன் நாடுதிரும்பல் மற்றும் மீளிணைதல் நிகழ்ச்சித் திட்டö செயற்பாடுகள் 100 செயல்திட்டங்களுக்கு மேல் கொண்டிருப்பதாக வளர்ந்து, தனிநபர்கள் உலகம் முழுவதுமுள்ள ஏறத்தாள 160 நாடுகளுக்கு திரும்புவதற்கு உதவியுள்ளது. கடந்த 10

ஆண்டுகளில் மாத்திரம் 3.5 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்வாளர்கள் தமது தாய்நாடுகளுக்கு சுயவிருப்புடன் திரும்புவதற்கு IOM உதவியுள்ளது.

அதிகரித்துவரும் புலம்பெயர்தலுக்கான சவால்களுக்கு முகம் கொடுத்தல், புலம்பெயர்தல் பிரச்சனைகளை முன்னராகவே புரிந்து கொள்ளல், புலம்பெயர்தல் ஊடாக சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்து, புலம்பெயர்வாளர்களின் நலன் மற்றும் அவர்களுடைய உரிமைகளை உறுதிசெய்தல் ஆகியவற்றில் உதவுவதற்காகவும் சர்வதேச சமூகத்திலுள்ள தனது பங்காளர்களுடன் IOM பணிபுரிகின்றது.

## 3.புறப்பட முன்னரான தகவல்கள்

திரும்பவிருக்கும் புலம்பெயர்ந்தவர்களுக்கு நாடு திரும்பியதும் அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய ERIN தனித்துவமான நடவடிக்கை திட்டத்தின் சேவைகள் பற்றி சம்பந்தப்பட்ட ஐரோப்பிய அங்கத்துவ நிறுவனங்களால் அறிவிக்கப்படும். விண்ணப்பதாரியின் தகவல் குறிப்பையும், தகவல்கள் அறியும் ஆலோசனையின்போது இனங்காணப்பட்ட தேவைகளையும் பொறுத்து, அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய உதவியின் வகையை ஆலோசனையாளர் இனங்காண்பார். ஒவ்வொரு ஐரோப்பிய பங்காளர் நிறுவனமும் (EPI) வரவேற்பு நிலையங்களிலும் (நிர்வாகம்), தடுப்புக்காவல் நிலையங்களிலும் தமது ஆலோசகர்களை கொண்டிருந்து, அந்த நிலையங்களில் தங்கியிருக்கும் நாடு திரும்பவுள்ள புலம்பெயர்வாளர்களுக்கு பயணிக்கு முன்னரான ஆலோசனைகளை வழங்குகின்றது. இந்த சந்திப்புகள் முறைசாராததாகவும் சினேகபூர்வமான முறையிலும் இருக்க வேண்டுவதுடன், பங்குபற்றுநர்கள் சந்திப்பின் குறிக்கோள்களை தெளிவாக புரிந்து கொண்டு, அவர்கள் கேள்விகள் கேட்பதற்கு சௌகரியமாக அமைய வேண்டும்.

### விசேட அழுத்தங்களுடன் கீழ்வரும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்:

- பயணிப்பதற்கு முன்னராக IOMஇனுடைய தொடர்பு விபரங்களை தயவுசெய்து மீள்திரும்புவருக்கு வழங்கவும்.
- பயணிப்பதற்கு முன்னராக மீளிணைதல் உதவி பற்றி இயலுமானவரை தயவுசெய்து விபரிக்கவும் அல்லது அவர் எதிர்பார்க்கும் மீளிணைதல் உதவியின் தன்மைபற்றியும் அளவுபற்றியும் விண்ணப்பதாரிக்கு விளக்கப்படுத்தவும்.
- சுயவிருப்புடன் தமது நாடு திரும்புவதற்கு விரும்புவோருக்கு, சுயவிருப்பின்றி நாட்டுக்கு திருப்பப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மீளிணைதல் உதவியிலும் பார்க்க பெரிதானக வழங்கப்படும்.
- சுயவிருப்பில்லாமல் நாடு திரும்புவோர் ஸ்ரீலங்காவினுள் முறைசார்ந்த விதமாக அனுமதிக்கப்பட்டு வருகை தந்தவுடன், IOM அவர்களுக்கு உதவும்.
- நீங்கள் நாடு திரும்புவதற்கு முன்னர், உங்களது மருத்துவ ஆவணங்களை மற்றும்/அல்லது கல்வி மற்றும் பயிற்சி சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரங்களை நீங்கள் திரும்பும் நாட்டின் மொழியில் அல்லது (இயலாதவிடத்து) ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள். இது உங்களுடைய உள்ளூர்

நிறுவனங்களுடன் உங்களை பதிவுசெய்து கொள்வதற்கு உதவுவதுடன், உங்களுடைய மருத்துவ தொடர் நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும்.

- நாடு திரும்புவதற்கு முன்னர், இலக்குக் குழுவினர் (சுயவிருப்புடன் அல்லது சுயவிருப்பற்ற நாடு திரும்புனர்கள் உள்ளடங்கலாக) தாம் திரும்பிய நாட்டில் அமைந்துள்ள IOMஇடம் தமக்குரிய வருகை-பிற்பாடு மீளிணைதல் உதவியை வழங்குமாறு கோரமுடியும் என அவர்களுக்குரிய EPI ஆலோசகர்களால் அறிவுறுத்தப்படும்.
- EPIயினால் மீள்திரும்பல் உதவி வழங்கப்படும் அதேநேரம், அவர்களுடைய வாழ்வை சுதந்திரமாக கட்டியெழுப்புவதற்கு தேவைப்படும் மீளிணைதல் உதவியை நாட்டினுள் வருகையடைந்தவுடன் IOM வழங்கும்.
- தகவலுக்கான ஆலோசனை கூட்டங்கள்.
- பெண்கள், பிள்ளைகள் மற்றும் சிறு பிள்ளைகள் கொண்ட வயதான அல்லது ஒற்றையான பெற்றோர் போன்ற எளிதில் பாதிப்புறக்கூடிய நபர்களை எதிர்நோக்கும்போது, சமூக மற்றும் பொருளாதார கரிசனைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

கீழ்வரும் பொதுவான அளவுகோல்களுக்கு அமைய தனித்துவரும் புலம்பெயர் பிள்ளைகளுக்கு **(Unaccompanied Migrant Children)** உதவிகள் வழங்கப்படும்:

01. பின்வருவனவற்றை IOM நிறைவேற்றும்:

a) ஆதரவு வழங்கும் நாடு (Host country) மற்றும் சொந்த நாடு (Country of origin) ஆகிய இரண்டிலும் (அல்லது பொருத்தமானவிடத்து மூன்றாவது நாடொன்றில், அதனது சட்டம்சார்ந்த தேவைகளுக்கு அமைவாக) உள்ள சட்டப்படியான பாதுகாவலர்களது அடையாளத்தை உறுதிப்படுத்தல்.

b) தனியாக பயணிக்கும் புலம்பெயர் பிள்ளைகள் நாடுதிரும்புவது அவர்களுக்கு நலம்சார்ந்தது என ‘மிகச்சிறந்த நலன்கள் தீர்மானித்தல்’ (Best Interests Determination – BID) செய்முறை முடிவுசெய்துள்ளது என உறுதிப்படுத்தல்.

c) IOMஇனால் குடும்ப கணிப்பீடொன்று நடத்தப்பட்டது என உறுதிப்படுத்தல்.

02. IOMஇனால் வழங்கப்படும் உதவி, BID செய்முறையினால் கிடைக்கப்பெறும் விளைவு மற்றும் திரும்புவதற்கு குழந்தை தெரிவிக்கும் சம்மதம் ஆகியவற்றினால் தீர்மானிக்கப்படுகின்றது.

03. தனியாக பயணிக்கும் குழந்தைகளுடைய (UMC) இயல்பான பலவீனம் மற்றும் பாதுகாப்பு, உதவுதல் ஆகியவற்றில் நிறுவனம் பேணும் அதி உச்ச ஆர்வம் ஆகியவை காரணமாக, குழந்தை பாதுகாப்பில் IOM பொதுவாக UNICEF கொள்கையை கடைப்பிடிக்கும்.

04. குழந்தையொன்றின் ‘உதவியளிக்கப்பட்ட சுயவிருப்புடனான திரும்பலுக்கும் மீளிணைதலுக்கும்’ வசதியளிப்பதற்கு முன்னர், IOM பின்வருவனவற்றை நிறைவேற்றும்:

a) சொந்த நாட்டிற்கு குழந்தை திரும்புவது அதனுடைய மிகச்சிறந்த நலனுக்காக என்பதை உறுதிப்படுத்தி, விருந்தோம்பி நாடு மற்றும் ஆரம்பநாடு ஆகிய இரண்டிலும் உள்ள சட்டப்படியான பாதுகாவலர்களிடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதங்கள் பெறல்.

b) a) பெற்றோர்கள் அல்லது சட்டப்படியான பாதுகாவலர்களுடைய அடையாளத்தை உறுதிப்படுத்தல் மற்றும் குழந்தை 18 வயதை அடையுமட்டும் அதனை பராமரிப்பதற்கு அவர்கள் சம்மதிக்கின்றார்கள் மற்றும் அவர்களால் பராமரிக்க இயலும் என்பதை உறுதிப்படுத்தல் b) IOMஇனால் உதவி வழங்கப்படும் சாத்தியக்கூற்றை தீர்மானித்தல் ஆகியவற்றிற்காக குடும்ப கணிப்பீடொன்றை நடத்தல்.

### சுயவிருப்பின்றி நாடு திரும்பல்:

- திருப்பி அனுப்பும் / ஆதரவு வழங்கும் நாடுகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் இருதரப்பு உடன்படிக்கை கொண்டிருக்கும்வரை, சொந்த நாட்டினுள் அனுமதிக்கப்படும் சுயவிருப்பின்றி நாடு திரும்புவோருக்கு IOM உதவ முடியும். இவ்வகையான நாடுதிரும்புவோருக்கு உதவுவதில் ஈடுபடுவதற்கு முன்னர், அவர்களுடைய சொந்த நாட்டு அரசாங்கம், திருப்பி அனுப்பும் ஒவ்வொரு நாட்டுக்கும் தனது சம்மதத்தை வழங்கியுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படுவதை IOM வேண்டி நிற்கும்.
- திருப்பி அனுப்பும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் நாடுகளால் இம்மாதிரியான உதவி பொருத்தமானது என கருதப்படும் பட்சத்தில், ஸ்ரீலங்காவிலுள்ள IOM இம்மாதிரியான ERIN தனித்துவமான நடவடிக்கை திட்டத்தின் கீழ் நாடுதிரும்புவோருக்கு மீளிணைதல் உதவி ஊடாக அவர்களுக்கு ஆதரவு வழங்குவதுடன், நாடுதிரும்பும் செயல்முறை முடிவுற்றபின்னர் மாத்திரமே இவ்வுதவி வழங்கப்படும். எவ்வாறாயினும், நாடுதிரும்பிய பின்னர் கிடைக்கவிருக்கும் IOM உதவி, நடைபெறவுள்ள வலுக்கட்டாயமான நாடுதிரும்பல் செயல்முறையை தீர்மானிக்கும் காரணியாக அமைய முடியாது.
- சுயவிருப்புடனற்ற நாடு திரும்புவோருக்கு IOM விமானநிலைய வருகை உதவி வழங்குவதில்லை.

## 04. IOM ஸ்ரீலங்கா

ஸ்ரீலங்கா IOM கடந்த 14 வருடங்களாக சுயவிருப்புடன் நாடுதிரும்பும் ஸ்ரீலங்கா புலம் பெயர்வாளர்களுக்கு மீளிணைவு சேவைகள் ஆதரவு வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றது. ஐரோப்பா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா மற்றும் ஆசியா ஆகிய இடங்களிலிருந்து நாடு திரும்பிய 5000இற்கும் அதிகமான ஸ்ரீலங்கா நாட்டினர் IOMஇடமிருந்து உதவியைப் பெற்றுள்ளனர். இவர்களில் அனேகமானோர் ஒன்றில் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டவர்கள் அல்லது பலதரப்பட்ட சேவைகள் தேவைப்பட்ட முறையற்றவித/நிர்க்கதியான புலம்பெயர்வாளர்களாகும்.

அனுபவம் வாய்ந்த ஊழியர்கள், மற்றும் ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் அமைந்திருக்கும் உப-அலுவலகங்கள் ஆகிய வலைப்பின்னலுடன், மீள்திரும்புவோருக்கு மிகக்கிட்டியதான தகவல்கள் வழங்கல், மீள்திரும்புவோரை களமட்டத்தில் கிரமமாக வரவேற்றல் மற்றும் ஆற்றுப்படுத்தல், தொழில் அபிவிருத்தி மற்றும் சிறிய அளவிலான தொழில் விருத்தி வடிவில் சுயதொழில் உருவாக்கம், தொழில்சார் பயிற்சி மற்றும் தொழில் பரிந்துரைகள் ஆகியவை மூலம் மீளிணைதல் தீர்வுகள் மீள்திரும்புவோருக்கு IOMஇனால் வழங்கப்படுகின்றது.

அரசாங்க பங்காளர்கள், ஆதரவு வழங்கும் நாட்டு IOM கிளை மற்றும் நாடு திரும்பும் புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் வேண்டுகோள்களை நிறைவேற்றும் பொருட்டு, நாடுதிரும்புவதிலும் மீளிணைவதிலும் ஒவ்வொரு கட்டத்திலும் மீள்திரும்புவோரால் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளை முன்கூட்டியே உணர்ந்து அதற்கான விரிவான தீர்வுகள் வழங்கக்கூடிய செயல்திறன்மிக்க மீள்திரும்பல் மற்றும் நிலையான மீளிணைதல் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

மேலதிக கேள்விகள் அல்லது மேலும் தகவல்கள் அவசியப்படுமிடத்து, மீள்திரும்பவுள்ளோர், ஐரோப்பிய பங்காளர் நிறுவனங்களின் ஆலோசனையாளர்களும் தரப்பட்டிருக்கும் IOM பிரதான உத்தியோகத்தரை (Single Point of Contact) நேரடியாக அழைக்க முடியும்.

**ERIN இணையதளம்:**
http://erin-iom.belgium.iom.int

**ERIN IOM தொடர்பு மையம்: SRI LANKA**

திரு. பிரியந்த குலதுங்க
நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்
தொடர்பு கொள்ளும் நேரம்: திங்கள் - வெள்ளி: 08:30-17:00
(ஸ்ரீலங்கா நேரம் - சர்வதேச திட்டநேரம் **GMT+**5.30)
மின்னஞ்சல;: MKULATUNGE@iom.int
தொலைபேசி: +94 11 5325310 தொலைநகரி: +94 11 5325 302

முகவரி:
புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம்
62, கிறீன் பாத், ஆனந்தகுமாரசாமி மாவத்தை
கொழும்பு-3இ ஸ்ரீலங்கா

## 05. ஸ்ரீலங்காவில், IOMஇன் சுயவிருப்புடனான மீள்திரும்பல் மற்றும் மீளிணைதலுக்கனா உதவித்திட்டத்தினால் வழங்கப்படும் ERIN தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்தின் சேவைகள்

மீளிணைதலுக்கான உதவிப்பொதி பொருளாக வழங்கப்படுவதுடன் (தேசிய பின்னிணைப்பில் வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி), அனுப்பும் நாடு, தேசிய மீளிணைப்பு கொடைகள், மீள்திரும்பும் வகை மற்றும் பயனாளி விபரக்குறிப்பு மற்றும் அவருடைய தேவைகள் ஆகியவற்றைப் பொறுத்து, தொகைகள் மாறுபடும். தனியாகப் பயணிக்கும் பராயமடையாதவர்களுக்கு மேலதிக மீளிணைதல் சேவைகள் வழங்கப்படும்.

நுண்பரிசீலிப்பு, மதிப்பீடு மற்றும் ஐரோப்பிய பங்காளர் நிறுவனங்களுடைய அங்கீகாரத்தின் பேரிலும், மீள்திரும்பலுக்குப் பின்னராக IOMஇனால் மேலும் தேவைகள் இனங்காணப்படுவதன் பேரிலும் ஒவ்வொரு தனிநபர் அடிப்படையில் கீழ்வரும் சேவைகள் ERIN தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்தின் பயனாளிகளுக்கு கிடைக்கக்கூடியனவாக உள்ளன:

## தனிநபர் அடிப்படையிலான விமானநிலைய வருகை உதவி

- வருகையின்போது சந்தித்து வரவேற்றல்.
- விமானநிலையத்துக்கு வெளியேயான பயணத்துக்கு உதவுதல்: உங்களால் வேண்டுகோள் விடுக்கப்படுவதன் பேரில், நாட்டினுள் உங்களது இறுதி பிரயாண இடத்தை நோக்கிய பயணத்துக்கு IOM பயணவசதி ஏற்படுத்தி அதற்கான கட்டணம் உங்களது மீளிணைப்பு உதவித் தொகையிலிருந்து பெறப்படும்.
- மருத்துவச் சிகிச்சை தொடர்வதற்கான மிக அவசர மருத்துவ பராமரிப்புக்கான பரிந்துரைகள்.
- குறைந்தபட்சம் ஒரு வாரத்துக்கான தற்காலிக தங்குமிடம்.

## மீளிணைதல் உதவி

கீழ்வரும் மீளிணைதல் சேவைகளுக்காக மீளிணைதல் கொடைகள் பயன்படுத்தப்பட முடியும்.

குறுந் தொழிலுக்கான ஆதரவு: பொருளாதார சுதந்திரம் மற்றும் வருமான உற்பத்திக்காக குறுந் தொழில் செயற்பாட்டை ஆரம்பித்தல், மீள ஆரம்பித்தல் அல்லது அதில் பங்காளராக இணைதல் ஆகியவற்றிற்கு உதவி வழங்கல். நீங்கள் சொந்தமாக ஒரு தொழில் ஆரம்பிப்பதை தெரிவு செய்தால் ஒரு பொருத்தமான தொழில் வகையை நீங்கள் இனம் காண்பதற்கு IOM உங்களுக்கு உதவும். தெரிவுசெய்யப்படும் தொழில், மற்றைய காரணிகளுக்கு மத்தியில், உங்களது முந்தைய அனுபவம், நீங்கள் மீள்திரும்பும் பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள வேறு தொழில்கள் முதலியவற்றில் தங்கியிருக்கும்.

தொழில் புரிதலை ஊக்கப்படுத்துவதற்கான சம்பள உதவித்தொகை: தனது பங்காளர் வலைப்பின்னல் ஊடாக IOM ஸ்ரீலங்கா உங்களை சாத்தியமான தொழில்தருநர்களுடன் தொடர்புபடுத்துவதுடன், சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்பு இணையதளங்களை எவ்வாறு இயக்கமுடியும் என்பதையும் காண்பிக்கும். உங்களுக்கு தொழிலொன்று கிடைத்தால், உங்களது மீளிணைதல் உதவித்தொகை, சம்பள உதவித்தொகை/சம்பளத்திற்கு மேலதிகமான தொகையாக விடுவிக்கப்படும்.

திறன்களையும், தொழில் பெறக்கூடிய தன்மையையும் அதிகரிப்பதற்குமாக தொழில்சார் பயிற்சிக்கு ஆட்சேர்த்தல்: கிடைக்கக்கூடிய தன்மை, முந்தைய தொழில் அனுபவம், கல்வி, ஆர்வம், குறிப்பிட்ட திறன்களுக்கு நிலவும் உள்ளூர் சந்தைக் கிராக்கி ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சிகள் இனங்காணப்படும்.

உடனடியான முக்கியமான தேவைகளை நிர்வகிப்பதற்காக தற்காலிக தங்குமிடம்

மீள்திரும்பிய பின்னர் உங்களை உடல்நல பராமரிப்பு பெறுவதற்கு இயலச்செய்வதற்கு மருத்துவச் செலவுகளை ஏற்றல் (மருந்துகள், நிபுணர் ஆலோசனை)

குழந்தைகள் கல்வி மற்றும் பாடசாலை செல்லும் செலவுகள், மற்றும் அவசியப்படும் ஏதும் நோய்த்தடுப்பு ஊசியேற்றல் மற்றும் மருத்துவப் பராமரிப்புக்கான செலவுகள்.

நீங்கள் உள்ளூரில் உங்களை பதிவு செய்துகொள்ள இயலச்செய்வதற்கு சட்டம்சார்ந்த / நிர்வாக செலவுகளை ஏற்றல்.

## நிர்வாகம்சார்ந்த ஆதரவு மற்றும் பரிந்துரைகள்

பின்வருவனவற்றை நிறைவேற்றுவதற்கு **IOM** உங்களுக்கு நிர்வாகம் சார்ந்த ஆதரவு மற்றும் பரிந்துரைகள் வழங்கும்:

- தேசிய, பிராந்திய, மற்றும் உள்ளூர் சேவைகள் (அரச, அரசசார்பற்ற, தனியார்துறை)
- உள்ளூரில் தொழில் புரிவதற்கான தொடக்க முயற்சிகள்
- குறும்-நிதி நிறுவனங்கள்
- பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்த்தல்
- கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சி
- விஷேட மருத்துவ உதவி
- உளவியல்சார் உதவி: நிபுணர் ஒருவரினால் IOM ஸ்ரீலங்காவின் ஊழியர்கள் இந்த துறையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்
- உள்ளூர் சமூக வலைப்பின்னல்
- சட்டம்சார்ந்த ஆலோசனை

## ஸ்ரீலங்கா நாடுபற்றிய தகவல்கள்:

## மருத்துவ பராமரிப்பு

ஸ்ரீலங்காவின் மருத்துவ பராமரிப்பு நிறுவனங்களின் வலைப்பின்னல் பெருமளவில் அரசாங்கத்தாலும், தனியார் துறையினராலும் இயக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளிலும் பொதுமக்களுக்கு அரசாங்கம் இலவச வைத்தியப் பராமரிப்பினை வழங்குகின்றது.

தொற்றக்கூடிய நோய்கள், தடுப்பூசி மருந்தினால் தடுக்கக்கூடிய நோய்களை இல்லாதகற்றல் மூலம் தாய் மற்றும் குழந்தை நலத்தை மேம்படுத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி தனது ஆரோக்கிய பலாபலன்களில் குறிப்பிடத்தக்க தரங்களையும் ஸ்ரீலங்கா அடைந்துள்ளது.

மக்களுடைய அதிகரித்த ஆயுட்காலத்தின் பலனாக உருவாகிய வயோதிபர்கள் சனத்தொகை அதிகரிப்புடன், இருதயநோய்கள், நீரிழிவு நோய், நாட்பட்ட சுவாச நோய்கள், சிறுநீரக நோய்கள் மற்றும் புற்றுநோய் போன்ற தொற்றமுடியாத நோய்கள் அதிகரிக்கும் போக்கு உருவாகியுள்ளது.

சமீபகாலத்தில், சுகாதார வளங்களின் முதலீடு அதிகரித்து சுகாதார கட்டமைப்பு அபிவிருத்தியடைந்து வருகின்றது. சுகாதார அதிகாரிகள் பின்வருவனவற்றை பிரதான சுகாதாரப் பிரச்சனைகளாக இனங்கண்டுள்ளனர்:

- சுகாதார சேவைகள் வழங்குவதில் கடைப்பிடிக்கப்படும் நேர்மையின்மை மற்றும் முதியோர் ஊனமுற்றவர்களுடைய சுகாதார தேவைகள் வழங்குவதில் காணப்படும் பிரச்சினைகள்
- தொற்றமுடியாத நோய்கள், தற்கொலைகள், தவறான பொருள் பயன்பாடு மற்றும் போஷாக்கின்மை ஆகியவற்றின் அதிகரித்த நிகழ்வு.

இந்த நோய்கள் பற்றிய தகவல்கள் மற்றும் நாட்டு நிலைமைபற்றிய மிகச்சமீபகால அறிக்கை ஆகியவை சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளமான www.health.gov.lk, தொற்றுநோயியல் பிரிவு www.epid.gov.lk இல் பார்வைக்காக உள்ளது.

## சுகாதார வசதிகள்

ஒவ்வொரு பிரதான ஊரிலும், நகரிலும் அரசாங்க வைத்தியசாலைகள் அமைந்துள்ளதுடன், அவை பலதரப்பட்ட மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு ஏற்றவாறு நவீன உபகரணங்களைக் கொண்டுள்ளன. இங்கு வழங்கப்படும் சேவைகள் பொதுவாக இலவசமானவையாகும். எவ்வாறாயினும், நாட்டிலுள்ள பிரதான இலவச சுகாதார வசதிகள் நெருக்கடிமிக்கதாக இருப்பதுடன், பெரும்பான்மையான பொது வைத்தியசாலைகளில் நோயாளிகளின் வருகைவீதம் 100%இற்கும் அதிகமானதாகும். கொழும்பிலும், சகல மாகாணங்களின் பிரதான நகரங்களிலும் மிகநவீன மருத்துவ உபகரணங்களைக் கொண்டு, உயர்ந்த தரத்திலான, ஆனால் செலவுமிக்க மருத்துவ பராமரிப்பை வழங்கும் அதிகமான தனியார் மருத்துவமனைகள் உள்ளன.

பொருளாதார அபிவிருத்தியடைந்த நாடுகளில தனியார் மருந்துச் செலவின் பெரும் பகுதி சுகாதார காப்புறுதியால் பொறுப்பேற்கப்படுவது போலன்றி, ஸ்ரீலங்காவில் தனியார் வைத்தியசாலை செவீனங்கள் ஏறத்தாள முற்றுமுழுதாக அதனைப் பயன்படுத்துபவர்களாலேயே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. புறநடையாக தனியார் கம்பனிகள் அவர்களது ஊளியர்களை காப்புறுதி செய்கின்றன.

கொழும்பு நகரில் அரசாங்க மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றின் பட்டியல் ஒன்றினைப் பெறுவதற்கு தயவுசெய்து பின்வரும் இணையதளத்திற்கு விஜயம் செய்க:
http://www.lankalinksystems.com/directory/newsinfo/healthinfo.htm

## வீடமைப்பு

சனத்தொகை அதிகரிப்புடனும் நகரமயமாக்கலுடனும் வீடமைப்புக்கான கிராக்கி அதிகரித்துள்ளது. தனியார் துறையினரின் ஈடுபாட்டுடனும், வீடமைப்புக்காக வழங்கப்படும் நிதியில் ஏற்பட்ட முன்னேற்றமுடனும், வீடு வழங்கல் விகிதம் தொடர்ந்து அதிகரித்தவண்ணம் உள்ளது.

காணி ஒதுக்கீடு செய்வது, நிதிகள் வழங்குவது ஆகியவை மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NHDA) குடும்பங்களுக்கு உதவி வழங்குகின்றது. அரசதுறை பிரதான வீடமைப்பு திட்டங்களின் அமுலாக்கலுக்கு NHDA பொறுப்பாக உள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு, அவர்களது ஊழியர் சேமலாப நிதியிலுள்ள (EPF) தொகையை பிணையாக பயன்படுத்தி வீடமைப்புக்கடன் வழங்குவதற்கு அரச வீடமைப்பு நிதி நிறுவனங்கள் பலப்படுத்தப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் ஸ்ரீலங்கா தொழிலாளர்களுடைய நலன்கருதி சலுகைகள் அடிப்படையிலான கடன் திட்டங்கள் மேலும் விரிவாக்கப்பட்டன.

மேலும், தனியார் துறையினரால் ஆரம்பிக்கப்பட்ட பெரிய அளவிலான வீடமைப்பு, குடியிருப்பு சமுதாயம் (township), கூட்டுரிமை வீடுகள் (condominium) அபிவிருத்தி செயல்திட்டங்கள் ஆகியவையும் உள்ளன. ஒரு மாற்றுத் தெரிவாக வீடுகளை வாடகைக்கு / குத்தகைக்கு எடுத்தலும் உண்டு, என்றாயினும் வீடுகள் அமைந்திருக்கும் இடத்தினைப் பொறுத்து அவற்றிற்கான விலைகள் பரந்த அளவில் மாறுபடுகின்றன.

கொழும்பு நகரில் காணி அரிதாகி வருவதையடுத்து, உயர் அடுக்குமாடிக் கட்டிடங்களுடைய செல்வாக்கு 2006லிருந்து அதிகளவில் உயர்ந்தது. ஆரம்பத்தில் உயர் அடுக்குமாடிகள் பெரும்பாலும் கொழும்பு நகரின் 3, 5, 6, 7 மற்றும் 8 பிராந்தியங்களில் மையப்பட்டிருந்தன. அடுக்குமாடி வளாகங்களில் உள்ள சகலவிதமான வசதிகள் மற்றும் சேவைகள் காரணமாக அவைகளுக்கான வாடகையானது குறிப்பிட்ட பகுதியிலுள்ள வீடுகளுக்கான வாடகையிலும் பார்க்க உயர்ந்திருக்கும் போக்குடையவையாகும். எவ்வாறாயினும், சமீபகாலமாக கொழும்பு நகரின் வெளிப்புறப் பகுதிகளிலும், கொழும்பு மாவட்டத்திலிருந்து தொலைவில் இருக்கும் சில பிரதான நகரங்களிலும், உடனடியான கொள்வனவுக்கும் மிதமான வாடகைக்கும் உயர் அடுக்குமாடிகள் கிடைக்கக்கூடியவையாக உள்ளன.

இலங்கையின் 25 வருடகால முரண்பாடு 2009 வைகாசியில் முடிவுக்கு வந்ததையடுத்து, வீடு விற்பனைச் சந்தை சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து கீழ்வரும் முகவரியை தரிசிக்கவும்:

www.nhda.lk
http://www.lanka.info/Sri_Lanka/realestate/index.jsp

## வேலைவாய்ப்பு

2014ஆம் ஆண்டு தொழிலில் ஈடுபட்டிருந்த நபர்களின் எண்ணிக்கை, முந்தைய வருடத்தில் தொழில்புரிந்த நபர்களின் எண்ணிக்கையான 8.418 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 0.1% குறு வளர்ச்சியை அடைந்து 8.424 மில்லியனை எட்டியது. இந்த அதிகரிப்பானது தொழில்துறை மற்றும் சேவைகள்துறை ஆகியவற்றில், மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கத்தினால் ஆதரிக்கப்பட்டு, உருவான தொழில் அதிகரிப்பில் பிரதானமாக அவதானிக்கப்பட்டது. இருந்தபோதிலும், 2014ஆம் ஆண்டின் பெரும்பகுதியில் நிலவிய பாதகமான காலநிலை காரணமாக விவசாயத்துறையில்

ஏற்பட்ட பின்னடைவு காரணமாக அத்துறையில் பணிபுரிந்தோரின் எண்ணிக்கை குறைவடைந்தது. இதன்படி, விவசாயத்துறையில் பணியாற்றியோரின் எண்ணிக்கையின் பங்கு 28.5 வீதமாக குறைவடைந்தது.

## குறுந்-தொழில்

குறுந்தொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு, அதன் உரிமையாளர் பின்வரும் செயல்முறைகளைப் பற்றி அறிந்திருக்கு வேண்டும்:

a. குறிப்பிட்ட தொழில் உள்ளூர் அதிகாரசபையினருடன் பதிவுசெய்யப்பட வேண்டும். சுற்றாடல் அங்கீகாரங்களும் பெறப்பட்டிருத்தல் வேண்டும். தங்களது மிகக்கிட்டிய பிரதேச செயலகத்தில் உரிமையாளர்கள் தமது தொழில் பதிவினை பெறவேண்டும். பதிவுக்கான செலவு ஏறத்தாள இலங்கை ரூபாய்கள் 1,000.00 ஆகும். ஒரு தனிப்பட்ட தொழில் அனுமதிப்பத்திரமும் - வருடாந்தம் புதிப்பிக்கப்படக்கூடியது ï மாகாணசபையிடமிருந்து, மாநகரசபையிடமிருந்து அல்லது பிரதேச சபையிடமிருந்து பெறப்படவேண்டும். இதற்கான கட்டணம் குறிப்பிட்ட தொழிலின் தன்மையைப் பொறுத்து மாறுபடும்.
b. தொழிலின் உரிமையாளர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, தொழில் மூலம் கிடைக்கும் மாதாந்த வருமானத்தின் அடிப்படையில் பெயரளவான தொகை ஒன்றை வரியாக உள்ளூா் அதிகாரசபையிடம் செலுத்தவேண்டும். குறிப்பிட்ட தொழில், இரைச்சலை உருவாக்கும் அல்லது வாயுவை வெளியேற்றும் அல்லது நீராவியை வெளியேற்றும் ஒரு தொழில்துறையுடன் சம்பந்தப்பட்டிருக்குமானால், சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து அங்கீகாரம் பெறுவது அவசியமானது. குறிப்பிட்ட தொழில் உணவு அல்லது குடிபானத்துடன் (உதாரணமாக வெதுப்பகம்-bakery, சிற்றுண்டிச்சாலை, உணவகம் அல்லது மாப்பண்ட சாலை (Pastry shop) தொடர்புபட்ட ஒன்றாக இருக்குமானால் பொது சுகாதாரப் பரிசோதகரிடமிருந்து அத்தாட்சிப்பத்திரம் பெறுவது அவசியமானதொன்றாகும்.

குறுந்தொழில்களுக்கென விசேட கடன்திட்டங்கள் உள்ளன. மேலும் தகவல்களுக்கு தயவுசெய்து www.microfinance.lk இற்கு விஜயம் செய்யவும்.

மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் புறம்பாக, அதிக எண்ணிக்கையிலான அரசுடன்இணைந்து செயற்படும் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச-சார்பற்ற நிறுவனங்கள் உத்தேச தொழில் முயற்சியாளர்களுக்கும் சிறிய அளவிலான தொழில் ஆரம்பிப்பதற்கும் ஆதரவினையும் நிதி உதவியினை வழங்குவதுடன், தேவையான பயிற்சியினையும் வழங்குகின்றன.

## கல்வியும் பயிற்சியும்

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய குடியேற்ற எஜமானர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரித்தானிய கல்வி முறையிலிருந்து ஸ்ரீலங்காவினுடைய தற்போதைய கல்விமுறை உருவாக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய குடியேற்ற அரசாங்கம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் தனித்தனியான கல்லூரிகளை அமைத்தது. இந்த கல்லூரிகள் பாலர் பாடசாலைகள், கீழ் இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் உயர் இடைநிலைப் பாடசாலைகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

1931இல் வழங்கப்பட்ட உலகளாவிய வாக்குரிமையின் விளைவாக 1938இல் அரசாங்க பாடசாலைகளில் கல்விகற்றல் இலவசமாக்கப்பட்டது. இதனை அடுத்து மகா வித்தியாலயங்கள் என்றழைக்கப்படும் பல அரசாங்க பாடசாலைகள் நாட்டின் சகல பகுதிகளிலும் ஸ்தாபிக்கப்பட்டன. மகாவித்தியாலங்களின் கல்விமொழி பொதுவாக சிங்களம் அல்லது தமிழாக இருப்பதுடன், இன்றையநாள் வரை கல்விவழங்கல் இலவசமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீலங்காவினது கல்விக் கட்டமைப்பு ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது: பாலர் பிரிவு, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை, கல்லூரி மற்றும் மேல்நிலைக் கல்வி. பாலர் பிரிவு 6 வருடங்கள்வரை நீடிப்பதுடன் (தரங்கள் 1-5 வரை) இந்தக்கால எல்லை முடிவில் தனிப்பட்ட மற்றும் அரசாங்க பாடசாலை மாணவர்கள் இருபாலரும் புலமைப்பரிசில் பரீட்சை என்னும் பரீட்சையை எழுதுவதை தெரிவுசெய்யலாம். அதிவிசேட திறமையுள்ள மாணவர்கள் உள்ளூர் மாவட்டத்திலோ அல்லது மாவட்டத்துக்கு வெளியிலோ மேலும் சிறந்த பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவதை இந்தப் பரீட்சை அனுமதிக்கின்றது. பாலர்கல்வி பூர்த்தியடைந்த பின்னர், கனிஷ்ட இடைநிலைக்கல்வி 4 ஆண்டுகளுக்கு (தரங்கள் 6-9 வரை) நீடிக்கும். ஸ்ரீலங்கா சட்டங்களின் பிரகாரம், சகல பிள்ளைகளும் தரம் 9 வரை பாடசாலைக்குச் செல்வது கட்டாயமாகும். இதன் பின்னர் அவர்கள் தமது கல்வியைத் தொடரலாம் அல்லது படிப்பை இடைநிறுத்தி தொழில் புரியலாம். எவ்வாறாயினும், பிற்காலத்தில் ஒரு பொருத்தமான தொழிலைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சகல மாணவர்களும் குறைந்தபட்சம் க.பொ.த. (சாதாரணம்) வரையிலாவது தமது படிப்பை தொடரவேண்டுமென கல்வியமைச்சு பலமாக ஆலோசனை வழங்குகின்றது. இந்தக் காலப்பகுதியில் மாணவர்கள் க.பொ.த.(சா) பரீட்சையை எழுதுவதற்காக சிரேஷ்ட இடைநிலை கல்வியில் 2 வருடகாலத்தை பூர்த்தி செய்கின்றனர் (தரங்கள் 10-11). கல்லூரிக் கல்வியை தொடர்வதற்கு இந்தப் பரீட்சையை மாணவர்கள் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டும். கல்லூரிக்கல்வி இரண்டு வருடங்கள் (தரங்கள் 12-13) நீடிப்பதுடன், இந்தக்காலத்தின் பின்னர் க.பொ.த. (உயர்தரம்) என்னும் இன்னுமொரு பரீட்சை உள்ளது. இந்தப் பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பின்னர் மாணவர்கள் மேல்நிலைக் கல்வியை (பல்கலைக்கழகமும் அதற்கு அப்பாலும்) தொடரலாம்.

## 01. பாலர் கல்வியும் இடைநிலைக் கல்வியும்

ஸ்ரீலங்காவினது சனத்தொகையின் கல்வியறிவு 91.3 வீதத்துடன் உயர்ந்த கல்வியறிவை கொண்டுள்ளது. தெற்காசியாவில் மிக உயர்ந்த கல்வியறிவு விகிதங்களில் ஒன்றாக ஸ்ரீலங்காவினது கல்வியறிவு விகிதம் விளங்குகின்றது. இந்த நிலைக்கு பிரதான காரணமாக இலவச கல்வித்திட்டம் விளங்குகின்றது. சகல அரசாங்க பாலர் மற்றும் இடைநிலைப் பாடசாலைகளையும் கல்வியமைச்சு நிர்வகிப்பதுடன் அங்கு கல்வி இலவசமாக வழங்கப்படுகின்றது. பாடசாலைகளின் மொழிமூலம் சிங்களம் மற்றும்∴அல்லது தமிழாக இருப்பதுடன், சில பாடசாலைகளில், பிரதானமாக கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில், ஆங்கில மொழிமூலத்தில் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

மேல்-நடுத்தர அந்தஸ்துடைய மக்கள் தோன்றியதன் காரணமாக ஸ்ரீலங்காவில் அதிக எண்ணிக்கையிலான தனியார் பாடசாலைகளும் உருவாஹின. அரசநிர்வாக பாடசாலைகளை விட அனேகம் தனியார் பாடசாலைகள் மேலும் சிறந்த வசதிகளை பெறக்கூடியவைகளாக உள்ளன. இந்தப் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் ஒரு மாதாந்த கட்டணத்தை செலுத்த வேண்டுவதுடன், பாடசாலையின் செல்வாக்கினைப் பொறுத்து குறித்த தொகை மாற்றமடையும்.

கொழும்பு மாவட்டத்திலும் அதன் வெளியேயுமுள்ள பிரதான நகரங்களில் அமைந்துள்ள, வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் செலவுத்தொகையை ஏற்றுக்கொள்ளக்கூடிய இயலுமையையும் சம்மதத்தினையும் கொண்ட எவரும் நாடக்கூடிய, சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. செலவுகளுக்கு மேலதிகமாக, சர்வதேச பாடசாலைகள் பின்வருவனவற்றில் தனித்தன்மையுள்ளன: மாணவர் தொகை: இருபாலர் கல்வி பாடசாலைகள் பாடவிதானம்: எடெக்சல் (Edexcel) பொது தராதர கல்வி (க.பொ.த) சாதாரண தரம், உயர்தரம் இடைநிலை (Advanced Subsidiary - AS) மற்றும் உயர்தர (A2) பரீட்சைகள். வேண்டுகோள்களின் பேரில் சில பாடசாலைகள் கேம்பிரிட்ஜ் பரீட்சைகளுக்கும் மாணவர்களை தயார்படுத்துகின்றன.

இப்பாடசாலைகள் பிரித்தானிய பாடவிதானத்தை பின்பற்றுவதன் காரணமாக அவைகள் கல்வியமைச்சுடன் பதிவுசெய்யப்படுவதில்லை.

வெளிநாட்டில் கல்விகற்ற மாணவர் ஒருவர் பின்னர் ஸ்ரீலங்காவிலுள்ள பாடசாலைகளில் சேருவதற்கு விரும்பினால், அதற்கான விண்ணப்பத்துடன் இறுதியாக கல்விகற்ற பாடசாலையிடமிருந்து பெற்ற ‘பாடசாலை விலகல்’ சான்றிதழின் பிரதி ஒன்றினையும் (இறுதியாக சித்தி எய்திய தரத்தினை குறிப்பிட்டு), பிறப்பு சான்றிதழையும் தம்முடன் வைத்திருந்து அரசாங்க, தனியார் அல்லது சர்வதேச பாடசாலைகள் எவற்றிலும் பொருத்தமான தரத்தில் சேரலாம். மாணவர் ஒருவரின் நிலைமையைப் பொறுத்து, குறிப்பிட்ட ஆவணங்கள் இல்லாதவிடத்து சில விதிவிலக்குகள் சாத்தியமானவை. எவ்வாறாயினும், பொழும்பு அல்லது கண்டி போன்ற சனத்தொகைமிக்க மாவட்டங்களிலுள்ள பிரசித்திபெற்ற அரசாங்க அல்லது தனியார் பாடசாலையொன்றில் நடுத்தவணையில் அனுமதி பெறுவது சிரமமான விடயமாக இருக்கக்கூடும்.

## 02. மேல்நிலைக் கல்வி

ஸ்ரீலங்காவில் பல்கலைக்கழக கல்வியும் இலவசமானது. அரச பல்கலைக்கழக முறையானது மிகவும் போட்டித்தன்மையானது, ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்து அதிஉயர் திறமையான மாணவர்களுக்கு மாத்திரம் மேல்நிலைக் கல்வியைத் தொடரும் வாய்ப்புகள் உத்தரவாதமளிக்கப்படுகின்றன. இதன்காரணமாக, பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத அனேகமான மாணவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தமது கல்வியைத் தொடர்வதற்காக வெளிநாடு செல்கின்றனர் அல்லது பட்டம் வழங்கும், அரசாங்கத்தால் நிதிப்படுத்தப்படும் ஸ்ரீலங்காவிலுள்ள கல்வி நிறுவனங்கள் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் இணைகின்றனர். பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களும் அரச பல்கலைக்கழகங்களில் அல்லது ஸ்ரீலங்கா திறந்த பல்கலைக்கழகத்தில் வெளிவாரி

மாணவர்களாக தமது உயர்கல்வியை தொடரமுடியும். இயந்திரவியல் (mechanical) மற்றும் (electronic) மின்னணுவியல் பாடங்களை விஷேடத்துவப்படுத்தும் தொழில்சார் தொழில்நுட்பக் கல்லூரிகளும் உள்ளன. ஸ்ரீலங்காவில் தற்போது 15 பிரதான அரச நிதிப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் உள்ளன. சமீபகால வருடங்களில், பல்கலைக்கழக சட்டத்தில் உருவாக்கப்பட்ட மாற்றங்களுடன், தமது சொந்த பட்டங்களை வழங்குவதற்கு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது, அதில் அதிபிரபல்யமானது அரச ரீதகவல் தொழில்நுட்பத்துக்கான ஸ்ரீலங்கா நிறுவனமாகும்். ï Sri Lanka Institute of Information Technology -SLIIT)

சர்வதேச பாடவிதானமொன்றின் கல்வியூடாக செல்லும் ஸ்ரீலங்கா மாணவர்கள் உள்ளூர் பல்கலைக்கழகங்களில் அனுமதியை பெறுவதற்கு தமது உள்ளூர் உயர்தர பரீட்சையை பூர்த்தி செய்யுமாறு பொதுவாக கோரப்படுவர் என்றாலும் இதற்கான விதிவிலக்குகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி மிகவும் போட்டித்தன்மையுடையதுடன் அது ஒவ்வொரு மாணவனும் பெறும் Z - திரட்டுத்தொகையை (Z – score) அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த அடிப்படை பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அரசாங்க இலவசக்கல்வி முறையாலும் நிறைவேற்றப்படுவதுடன் சில மாணவர்கள் ரீமகாபொல புலமைப்பரிசில் திட்டத்தின்் கீழ் (தகுதி அடிப்படையில்) கொடையொன்று வழங்கப்படுவதற்கு உரித்துடையவர்களாவர்.

பல்கலைக்கழகங்கள் பல வகையான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (diploma) மற்றும் சான்றிதழ் (certificate) கற்கைநெறிகளையும் நடத்துகின்றன, ஆனால் இவை அரசாங்கத்தின் இலவச கல்வித்திட்டத்தால் உள்ளடக்கப்படுவதில்லை. இந்த கற்கைநெறிகளில் சகல மாணவர்களும் பங்குபற்றலாம். வெளிநாட்டில் கல்விபயின்ற மாணவர் ஒருவர் பட்டப்பின்படிப்பு/டிப்ளோமா அல்லது சான்றிதழ் கற்கைநெறியை கற்க விரும்பினால் அவர் முழுவிரங்களும் அடங்கிய கல்விச் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் போன்ற சம்பந்தப்பட்ட ஆவணங்களை வழங்கவேண்டும். வேறுபல நிறுவனங்களால் நடத்தப்படும் வெளிவாரிப் பட்டங்கள், டிப்ளோமாக்கள் மற்றும் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகள் உள்ளன. இந்த நிறுவனங்களின் அனுமதிக்கான தெரிவுக்காரணிகள் வேறுபடுவதுடன், கற்கைநெறிகள் வழமையாக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படுகின்றன. ஸ்ரீலங்கா திறந்த பல்கலைக்கழகம், வெளிநாட்டில் கல்விகற்ற மாணவர்களும் பின்பற்றக்கூடிய அடிப்படை பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக, தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை (இவைகளும் அரசாங்க இலவச கல்வித்திட்டத்தால் உள்ளடக்கப்படாதவை) நடத்துகின்றது. ஸ்ரீலங்கா திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கற்கைநெறிகளை கற்பதற்கு வயதெல்லை கிடையாது.

பல்வேறு மாவட்டங்களிலும் பல தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளன. அவை தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் ஆகியவற்றை வழங்குகின்றன. மேல்நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு, கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், உயர் தொழில்நுட்ப சபைக்கான ஸ்ரீலங்கா நிறுவனம் (Sri Lanka Institute of Advanced Technical Council) மற்றும் தேசிய தொழில்நுட்ப

கல்வி நிறுவனம் (National Institute of Technical) போன்ற பல அரசதுறை நிறுவனங்களை நிர்வகிக்கின்றது. அதிக எண்ணிக்கையிலான தனியார்துறை நிறுவனங்களும் தொழில்சார் பயிற்சி வசதிகளை வழங்குகின்றன. இவற்றிற்கான இலக்குக்குழு பொதுவாக பலவகைப்பட்டதாக இருப்பதுடன், தொழிலற்ற இளைஞர்கள், கிராமப்புற ஆண்கள், பெண்கள் மற்றும் பாடசாலை விலகியோர் ஆகியோரை கொண்டதாகும்.

மேலும் தகவல்களுக்கு தயவுசெய்து கீழுள்ள இணையதளத்திற்கு விஜயம் செய்யவும்:
http://en.wikipedia.org/wiki/List_of_universities_and_colleges_in_Sri_Lanka

http://www.moe.gov.lk/

| மறுப்புக் கூற்று **Disclaimer** |
| --- |
| மிகுந்த அவதானத்துடன் தகவல்சேகரிப்பை IOM மேற்கொண்டுள்ளது. தனது மிகுந்த அறிவுக்கெட்டியவரையும் முழுமனச்சாட்சியுடனும் தகவல்களை வழங்குகின்றது. இருந்தபோதிலும், வழங்கப்பட்ட தகவல்களின் சரிநிலைக்கு IOM பொறுப்புக்கூறுவதற்கு அழைக்கப்பட முடியாது. மேலும், IOMஇனால் வழங்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஏதும் முடிவுகள் அல்லது ஏற்படும் விளைவுகளுக்கு IOM பொறுப்புடையதாகாது. |

## ERIN தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்தின் கொடையாளிகள்

| இல. | ERIN பங்காளர் நாடுகள் | S.N | ERIN பங்காளர் நாடுகளும் நிறுவனங்களும் |
| --- | --- | --- | --- |
| 1 | அவுஸ்திரேலியா | 1 | Ministry of Interior |
| 2 | ஒஸ்ட்ரியா | 2 | Department of Immigration and Border Protection |
| 3 | பெல்ஜியம் | 3 | Federal Immigration Office |
| | | 4 | Federal Agency for the Reception of Asylum Seekers |
| 4 | டென்மார்க் | 5 | Ministry of Foreign Affairs |
| 5 | பின்லாந்து | 6 | Finnish Immigration Service |
| 6 | பிரான்ஸ் | 7 | French Immigration and Integration Office |
| 7 | ஜெர்மனி | 8 | Federal Office for Migration and Refugees |
| 8 | கிரீஸ் | 9 | Ministry of Public Order and Citizen Protection |
| 9 | இத்தாலி | 10 | Ministry of Interior |
| 10 | லக்சம்பெர்க் | 11 | Ministry of European and Foreign Affairs |
| 11 | மோல்டா | 12 | Ministry for Home Affairs and National Security |
| 12 | நெதர்லாந்து | 13 | Repatriation and Departure Service |
| 13 | நோர்வே | 14 | Norwegian Directorate of Immigration |
| 14 | ரொமேனியா | 15 | General Inspectorate for Immigration |
| 15 | ஸ்பெய்ன் | 16 | Integration of Immigrants Migration Board |
| 16 | சுவீடன் | 17 | Swedish Migration Agency |
| 17 | சுவிட்சர்லாந்து | 18 | State Secretariat for Migration |
| 18 | ஐக்கிய இராச்சியம் | 19 | Home Office – Immigration Enforcement |